Under Section 173 BNSS

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165175

1. District மாவட்டம் : Tiruppur PS: காவல்நிலையம் VSAC Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 2/2025/AC/TPR Date: நாள் 21.03.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Sections பிரிவுகள்: 7(b)
(ii) Act சட்டம்: Corruption (Amendment) Act, Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை On 05.03.2025 at 14.00 hrs at her office
On 11.03.2025 at 15.00 hrs at VAO office
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை On 14.03.2025 at 11.30 hrs at VAO office
On 17.03.2025 at 15.00 hrs at VAO office
(b).Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.03.2025 Time : நேரம் 07.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 21.03.2025 G.D. Vol. I Time : நேரம் 07.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும். எத்திசையும் At about 27 km South West
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி O/o. Village Administrative Office K. Ayyampalayam Village Palladam Taluk, Tiruppur District
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. Kathivel (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P. Kumarasamy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 35/2025 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Contractor (g) Address : முகவரி Door No. 1/7 - Vellathottam, K. Ayyampalayam, Palladam Taluk, Tiruppur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tmt. Revathi, Village Administrative Officer, K. Ayyampalayam Village, Palladam Taluk, Tiruppur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 21/3/2025 [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 21.03.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Sasilekha
Rank: நிலை Inspector of Police No. எண் ........
V&AC, Tiruppur.
21.03.2025

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 2/2025/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 21.03.2025-ம் தேதி காலை 07.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திரு.K.கதிர்வேல், த/பெ.P.குமாரசாமி, கதவு எண்.1/7 வெள்ளத்தோட்டம், கே.அய்யம்பாளையம், பல்லடம் தாலூகா, திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் K.கதிர்வேல், த/பெ.P.குமாரசாமி, கதவு எண்.1/7 வெள்ளத்தோட்டம், கே.அய்யம்பாளையம், பல்லடம் தாலூகா, திருப்பூர் பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, திருப்பூர். நான் திருப்பூர் மாவட்டம், பல்லடம், கே.அய்யம்பாளையம், வெள்ளத்தோட்டத்தில் வசித்து வருகிறேன். நான் எனது அப்பா பெயரில் ராகவ் ஏஜென்சீஸ் என்ற நிருவனத்தை நடத்தி வருகிறேன். ராகவ் ஏஜென்சீஸ் பெயரில் பல்லடம் யூனியன் அலுவலகத்தில் ஒப்பந்ததாராக கடந்த 4 வருடமாக பில்டிங் காண்ட்ராக்ட் வேலைகளை எடுத்து செய்து வருகிறேன். மேலும், தனியார் நிறுவனங்களில் எலெக்ட்ரிக்கல் காண்ட்ராக்ட் வேலைகளை செய்து வருகிறேன். பல்லடம் யூனியனில் இந்த வருடத்திற்கான காண்ட்ராக்ட் வேலைகளை எடுத்து செய்வதற்கு ஒப்பந்தாரார் உரிமத்தை புதுப்பிக்க செல்வ நிலை சான்றிதல் தேவைப்படுகிறது. அதற்காக எனது அப்பா பெயரில் கே.அய்யம்பாளையம் கிராமத்தில் க.ச.எண்.42/1C-ல் உள்ள 0.59.5 ஹெக்டேர் நில ஆவணங்களை காண்பித்து 5 லட்சம் மதிப்பிலான வேலை செய்வதற்காக செல்வ நிலை சான்றிதல் வாங்குவதற்காக பல்லடம் தாலுகா அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையத்தில் நில ஆவணங்களுடன் 27.02.2025 தேதி ஆன்லைனில் எனது அப்பா குமாரசாமி பெயரில் விண்ணப்பம் செய்தேன். அந்த அப்ளிகேசன் எண்.TN 172025022715З படி ஒப்புகை சீட்டு கொடுத்தார்கள். அதன் பிறகு 28.02.2025 தேதி காலை சுமார் 11 மணி அளவில் பல்லடம் - செட்டிபாளையம் ரோட்டில் உள்ள கே.அய்யம்பாளையம்

21.03.2025

VAO அலுவலகம் சென்று VAO திருமதி.ரேவதி அவர்களை பார்த்து செல்வநிலை சான்றிதல் விண்ணப்பித்துள்ளது சம்பந்தமாக பேசியபோது அவர் விபரங்களை கேட்டுவிட்டு கூப்பிடுவதாக கூறினார். அதன்பின்னர் நான் 03.03.2025 தேதி மதியம் சுமார் 12 மணியளவில் VAO அலுவலகம் சென்று VAO திருமதி.ரேவதி அவர்களை பார்த்து சால்வன்சி சம்பந்தமாக கேட்ட போது நீங்கள் உங்க இஷ்டத்துக்கு அப்ளை செய்துவிட்டு உடனே வேண்டுமென்று வருவீர்கள் நான் இடத்தை வந்து பார்க்க வேண்டாமா. 5 லட்சம் மதிப்பில் சால்வன்சி கேட்டுள்ளீர்கள். நான் சும்மா கொடுக்க முடியுமா என்று சத்தம் போட்டார். பின்னர் நான் ஒன்றும் சொல்லாமல் வந்துவிட்டேன். சால்வன்சிக்கு விண்ணப்பித்து ஒருவாரம் ஆகியும் கிடைக்காததால் நான் 05.03.2025 தேதி மதியம் சுமார் 12.30 மணி அளவில் VAO அலுவலகம் சென்று VAO திருமதி.ரேவதி அவர்களை பார்த்து சால்வன்சி அப்ளை செய்து ஒருவாரம் ஆகியும் இன்னும் பிராசஸ் ஆகவில்லை என்று கேட்ட போது அவர் 2 மணிக்கு வர சொன்னார். அன்றே நான் சுமார் 2 மணி அளவில் அவரை பார்த்த போது அவர் சால்வன்சியை பிராசஸ் செய்வதற்கு தனக்கு தனியாக ரூ.20,000/- கொடுங்கள் என்றும் அந்த சொத்தின் மதிப்பு ஏக்கருக்கு 2 கோடி போகும் என்றும் நான் கேட்டிருப்பது ஒரு சிறிய தொகை தான் என்று கூறி நான் கேட்ட தொகையை உடனடியாக கொடுத்தாள் R.I க்கு பார்வேர்டு செய்து விடுகிறேன் என்று கூறினார். அதற்கு நான் கடன் வாங்கி தான் தொழில் செய்கிறேன் பார்த்து செய்யுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் உங்க ஸ்டேட்டசுக்கு நான் கேட்டு இருக்கும் தொகையே கம்மி தான் என்று சொன்னார். அதன்பின்னர் நான் ஒன்றும் சொல்லாமல் வந்துவிட்டேன். பின்னர் 11.03.2025 தேதி மாலை சுமார் 3 மணிஅளவில் VAO அலுவலகம் சென்று VAO அவர்களை பார்த்து மேடம் இன்னமும் எந்த அப்டேட்டும் ஆகவில்லை என்று கேட்ட போது அவர் இன்னும் நான் கேட்ட அமவுண்ட் கொடுக்காமல் எப்படி பிராசஸ் செய்வது என்று சொன்னார். நான் மேடம் எனது மனைவிக்கு உடல்நிலை சரி இல்லாமல் அதற்கே பணம் நிறைய செலவு ஆகிவிட்டது. என்னிடம் பணம் இல்லை. நான் ஒப்பந்ததாரராக புதுப்பிக்க மார்ச் இறுதிக்குள் சால்வன்சியை யூனியன் அலுவலகத்திற்குள் கொடுக்க வேண்டியுள்ளதால் நீங்கள் சீக்கிரமாக பார்வேர்டு செய்யுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் அமொண்டை கொடுத்தால் தான்

21-03-2025

பார்வேர்டு செய்ய முடியும் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். பின்னர் 14.03.2025 தேதி காலை சுமார் 11.30 மணி அளவில் VAO அலுவலகம் சென்று VAO அவர்களை பார்த்து சால்வன்சி சம்பந்தமாக கேட்டபோது அவர் அமொண்ட் கொண்டு வந்திருக்கிறீர்களா என கேட்டார். நான் இல்லை என்று சொன்ன போது அவர் இப்போதே ரிஜெக்ட் செய்துவிடுகிறேன் என்றும் நான் ஒவ்வொரு முறை கேட்டும் பணம் இல்லை பணம் இல்லை என்று சொல்கிறீர்கள் என்று சத்தம் போட்டார். நான் வேறு வழி இல்லாமல் செலவிற்காக வைத்திருந்த பணம் ரூ.5,000/-த்தை அப்போதே அவரிடம் கொடுத்தேன். அவர் அந்த பணத்தை வாங்கி கொண்டு மீதி பணம் ரூ.15,000/- த்தை கொடுத்தால் தான் அதிகாரிகளுக்கு பார்வேர்டு செய்வேன் என்று கறாராக சொல்லிவிட்டார். அதற்கு நான் பார்த்து செய்யுங்கள் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். நான் சால்வன்சிக்கு விண்ணப்பித்து 15 நாட்களுக்கு மேலாகியும் கிடைக்காததால் 17.03.2025 தேதி மதியம் சுமார் 3 மணி அளவில் VAO அலுவலகம் சென்று VAO அவர்களை பார்த்து சால்வன்சி பிராசஸ் ஆகவில்லை என கேட்ட போது அவர் அமொண்ட்டை கொடுத்துவிட்டு போங்கள். நான் R.I க்கு பார்வேர்டு செய்துவிட்டேன். நான் கேட்ட மீதி பணத்தை கொடுத்தால் தான் அதிகாரிகளிடம் பேசி சீக்கிரமாக சால்வன்சி வேலையை முடித்து கொடுப்பேன். இல்லை என்றால் சால்வன்சியை ரத்து செய்ய சொல்லிவிடுவேன் என்று கறாராக சொல்லிவிட்டார். நான் எனது அப்பா குமாரசாமி பெயரில் செல்வநிலை சான்றிதல் வழங்க பரிந்துறை செய்ததற்கும், செல்வநிலை சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்வதற்கும் கே.அய்யம்பாளையம் VAO திருமதி.ரேவதி அவர்கள் லஞ்சமாக கேட்கும் பணம் ரூ.15,000/-த்தை கொடுக்க விருப்பம் இல்லை. எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxx K.Kathirvel, 21/3/2025. Sir, Received the complaint on 21.03.2025 at 07.00 hrs and made preliminary verification between 07.00 hrs and 07.30 hrs after getting approval from DVAC, Chennai and registered a case in Tiruppur V&AC Cr.No.2/2025/AC/TPR u/s 7(b) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 21.03.2025 between 07.30 hrs to 08.35 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 21/03/2025 Inspr. V&AC, TPR.

21.03.2025

Original FIR along with original complaint of K.Kathirvel, S/o.P.Kumarasamy, Door.No.1/7, Vellathottam, K.Ayyampalayam, Palladam Taluk, Tiruppur is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 21.03.2025.